

## பின்னணி

இலங்கைப் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்த அளவில்,வெறும் 5.3 சதவீதமாகவே, காணப்படுகின்றது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 12 பெண் உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். அரசியல் பிரதிநிதித்துவத்தினை பொறுத்தவரையில் இலங்கையிலுள்ள பெண்கள் குறிப்பிடத்தக்க அளவு தடைகளை எதிர்கொள்கின்றனர். சர்வதேச ரீதியில் தேசிய சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவப் பட்டியலில் இலங்கை மிகக் குறைத்த நிலையிலேயே காணப்படுகின்றது. எனவே, அரசியலில் பெண்களின் குறைந்த அளவிலான பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கு இலக்குடன் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

# அரசியலில் பெண்கள் இலங்கை

## பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் பரிந்துரைகள்

**9 ஆவது பாராளுமன்றம், இலங்கை - திசெம்பர் 2023**

### 1 தேசியப் பட்டியல்

தேசியப் பட்டியலில் 50 சதவீதம் வெவ்வேறு தொழில்நிலையில் உள்ள பெண்களைக் கொண்டமைந்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். முதல் இரண்டு வேட்பாளர்கள் ஒரே பால்நிலையைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது - அலைவரி வடிவ முறையைப் (ZIG-ZAG METHOD) பயன்படுத்தவும்.

### 2 நியமனப் பட்டியல்

நியமனப் பட்டியலில் ஆகக் குறைந்தது 30 சதவீதமான பெண் வேட்பாளர்கள் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

### 3 மாற்றப்பட முடியாத கட்சிப் பட்டியல்கள்

தேசியப் பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் தேர்தலுக்குப் பின் மாற்றப்படக் கூடாது.

### 4 இணைந்த தலைமை மாதிரி

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஆண் மற்றும் பெண் இணைத் தலைவர்களை நியமித்தல்.

### 5 பால்நிலை அடிப்படையிலான ஒதுக்கீடுகள்

ஆண்களும் பெண்களும் ஒரேமாதிரிச் சமமாகப் போட்டியிடும் நிலை உருவாகும் வரை, தற்காலிகமாக, பெண்களுக்கு 25 சதவீதம் என்ற ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்துதல். அனைத்து அரசியற் கட்சிகளும் தம் கட்சிகளின் தீர்மானமெடுக்கும் நிலையிலுள்ள பதவிகளுக்கு ஆகக் குறைந்தது 33 சதவீதம் பெண்களை நியமிக்க வேண்டும்.

### 6 பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையை (ZERO-TOLERANCE POLICY) கடைப்பிடித்தல்.

### 7 தேர்தல் மறுசீரமைப்புக்கள்

பொருத்தமான முறையில் நியூசிலாந்து தேர்தல் முறைமையை பின்பற்றி தேர்தல் முறையை மறுசீரமைப்புச் செய்தல். சட்டரீதியாக பாராளுமன்றத்தில் ஆகக் குறைந்தது 25 சதவீதமான பெண்களும் கட்சி கட்டமைப்புக்களுக்குள் தீர்மானமெடுக்கும் நிலையிலுள்ள பதவிகளில் ⅓ பங்கு பெண்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.